## வாக்குமூலம்
## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
## வழக்கு எண்: CC – 244/2023

**வழக்கு சாட்சி :PW3(LW7)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நிவேதிதா | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | அரசு ராணியர் மருத்துவமனை, உதவி பேராசிரியர் |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | | | வயது | : | |

(1 ம் எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை .எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 20th day of November 2025.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது அரசு ராணியர் மருத்துவமனையில் உதவி பேராசிரியாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.09.2023 ம் தேதி இரவு 10.20 மணியளவில் நான் இலுப்பூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, முத்துக்கருப்பையா, வயது 63, த/பெ.கருப்பையா மருத்துவ பரிசோதனைக்காக என்னிடம் அழைத்து வந்தார்கள். அவர் என்னிடம் தன்னை இரண்டு நபர்கள் தனது வயலில் வைத்து ஆயுதத்தால் அடித்தார்கள் என கூறினார்கள். எந்த ஆயுதம் என கூறவில்லை. அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு தலையில் 6X6X4cm ஆழமான எலும்பு தெரியக்கூடிய வகையில் ஒரு வெட்டுக்காயம் இருந்தது. அவருக்கு முதலுதவி சிகிச்சை செய்து மேல்சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பினேன். அங்கு அவருக்கு சிகிச்சை அளித்து சிகிச்சை அளித்த மருத்துவர் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என கருத்துரை வழங்கியுள்ளார். அவர் வழங்கிய கருத்துரையின் அடிப்படையில் அவருக்கு சாதாரண காயம் என கருத்துரை வழங்கினேன். **கருத்துரை அ.சா. ஆ.3 ஆகவும், விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்றிதழ் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு குறித்து காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

பொதுவாக நெற்றி என்பதும், தலை என்பதும் வெவ்வேறு என்றால் சரிதான். சிகிச்சைக்கு சேர்ந்த நபருககு தலையில் காயம் ஏற்பட்டது என்றாலும், நெற்றியில் ஏற்பட்டதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் சிகிச்சை அளித்த

நபருக்கு நெற்றியில் காயம் எதுவுமில்லை என்றால் நான் பார்த்த வகையில் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கும் போது கட்டையோ , கம்பியோ அல்லது அரிவாளோ எதுவும் காண்பித்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். தலையில் ஏற்பட்ட காயத்தை தவிர அவருக்கு வேறு எந்த காயங்களும் இல்லை என்றால் சரிதான். தாழ்வாக இருக்கும் கூரைக் கொட்டகையில் அமர்ந்து வேகமாக எழுந்திருக்கும் போது கூர்மையான கம்புகளில் வேகமாக மோதுவதால் காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு மோதுவதால் காயங்கள் ஏற்பட வாய்புள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. கட்டையாலும், கம்பியாலும், அடித்தால் மேற்சொன்னவாறு ஆழமான காயங்கள் ஏற்பட வாய்பபில்லை என்றால் சரிதான்.